பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2004 — 613-615

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 615

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 616-634

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 — 616-634

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் — 615, 616, 617, 619, 626-630

திரு. சி. ஞானசேகரன் — 617-618

திரு. ஜி.கே. மணி — 618-620

திரு. வை. சிவபுண்ணியம் — 620-621

திரு. ஜி. பழனிசாமி — 621-622

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 622-624

திரு. கு. பிச்சாண்டி — 624

8. அரசினர் தீர்மானம்—

விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தல் — 615-616, 634-635

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 634-635

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

கார்த்திகை 3, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 நவம்பர் 18, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்."

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள், அவையின் நேரத்தையும், நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. லா. சந்தானம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

21—

மாணவர் விடுதி

***55376—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் ஊராட்சி, வடக்கம்பட்டியில் கள்ளர் மாணவர் விடுதி புதியதாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் ஊராட்சி, வடக்கம்பட்டியில், கள்ளர் மாணவர் விடுதி எதுவும் இயங்கவில்லை. கருமாத்தூர் பகுதியைச் சுற்றி 5 கள்ளர்

சீரமைப்பு விடுதிகளும், உசிலம்பட்டியைச் சுற்றி 9 கள்ளர் சீரமைப்பு விடுதிகளும் இயங்கி வருகின்றன. மேலும் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் விடுதிகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சொந்தக் கட்டடம் கட்ட பெரும் தொகை செலவு செய்யப்பட்டுவரும் நிலையில், புதிய விடுதிகள் திறக்கும் கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. எனவே, உசிலம்பட்டி தொகுதி, வடக்கம்பட்டியில் புதிய விடுதிகள் திறக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஒவ்வோர் ஆண்டும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தித் தருகின்ற ஒரு நிலையில், ஒவ்வோர் ஆண்டும் 300-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இப்படித் தரம் உயர்த்தப்படுகின்றன. அப்படித் தரம் உயர்த்தப்படுகின்றபோது மாணவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு எல்லா விடுதிகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்கவேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தோடு, பெருநோக்கத்தோடு, கடந்த 3 ஆண்டுகளாக, எல்லா விடுதிகளுக்கும் புதிதாக அத்தனை வசதிகளையும் கொண்ட கட்டடங்களை அமைத்துத் தந்து இருக்கிறது. ஆனால், இப்படி வளர்ந்து வருகிற பள்ளிகளுக்குப் புதிதாக விடுதிகள் வேண்டும் என்கின்ற கோரிக்கை இங்கு மட்டும் அல்ல, மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றது. எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையாகத்தான் நான் இதை இங்கே வைத்திருக்கிறேன். எனவே, அரசும், அமைச்சரும் இருக்கிற விடுதிகளுக்குக் கட்டடங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டுவிட்டன; புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டன; புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட இந்தப் பள்ளிகளுக்கு எல்லாம், விடுதிகள் என்பது அவசியத் தேவை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டு ஏதாவது விடுதிகள் புதிதாகத் துவங்குவதற்கு உரிய நிலைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பள்ளி

2004 நவம்பர் 18]

மாணவர்களுடைய விடுதிகள் மட்டும், மொத்தம் 972 விடுதிகள் இருந்தன. அவற்றில் தனியார் விடுதிகள் மட்டும் 770. இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், இன்று அரசினுடைய 314 விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் நிரந்தரமாகக் கட்டுவதற்கான உத்தரவுகள் வழங்கி, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல், இப்போது போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகளையும் செய்து கொண்டு இருக்கிறார்கள். மேலும், பள்ளி விடுதி மாணவர் ஒருவருக்கு, ஒரு மாதத்திற்கு உணவுக் கட்டணம் ரூ.225 என்று இருந்ததை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ரூ.300 ஆக உயர்த்தி இருக்கிறது. இதுபோன்ற செலவினத்தைச் செய்து இப்போது வாடகைக் கட்டடங்களில் இருக்கிற 770 விடுதிகளில் 314 விடுதிகளுக்குப் புதிதாக நிரந்தரக் கட்டடத்தைக் கட்டிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. இதுபோன்று செயல்பட்டுகொண்டு இருக்கின்றபோது,, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து குறித்து மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், வருங்காலத்திலே நிதிநிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதை இம் மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி என்பது கிராமப்புறங்களிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இங்கே நான் கேட்டு இருக்கின்ற வடக்கம்பட்டி பள்ளி விடுதியில்கூட, தங்களுடைய தொகுதியிலே இருந்து பெரும்பான்மையான மாணவர்கள் வந்து அங்கு படித்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இரண்டுக்கும் பொதுவான ஒன்றுதான். அதற்குப் போதிய போக்குவரத்து வசதிகள்கூட இல்லை. எனவே, இதற்கென்று தனியாக சிறப்புக் கவனம் செலுத்தி, அமைச்சர் அவர்கள் இந்த விடுதியைக் கட்டுவதற்கு உரிய நிலையை--விடுதியை உருவாக்குவதற்குரிய நிலையை--உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.